தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.

தொலைபேசி: 044 – 22201337

மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை: திரு. மு.மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப.(ஓ).,
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண்.37/மா/2021

நாள். 03.02.2022

திரு.B.விஜயகுமார்,
சென்னை – 600 081. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம்–4, சென்னை – 600 081. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை, துர்காதேவி நகர், எண்.14/15, சால்ட் குறுக்கு தெருவில் வசிக்கும் திரு B.விஜயகுமார் அவர்களின் 05.05.2021 நாளிட்ட முறையீட்டு மனு 07.05.2021 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 37/2021 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப்பதிவு செய்யப்பட்டது. மேற்குறிப்பிட்ட முறையீட்டுமனு மீது உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

பெருநகர சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை, துர்காதேவி நகர், எண்.14/15, சால்ட் குறுக்கு தெருவில் வசிக்கும் திரு B.விஜயகுமார் அவர்கள் தனது முறையீட்டு மனுவில், சென்னை மாவட்டத்தில் உள்ள தண்டையார்பேட்டை, மண்டலம்–04, பகுதி–09, வார்டு–38, எண்ணூர் நெடுஞ்சாலை, பவர் ஹவுஸ் பேருந்து நிலையம் அருகில், கதவு எண்.144, நெல்லை வசந்த் உணவகம்(hotel) என்ற இடத்தில் எந்த ஒரு கட்டுமான அனுமதியும் பெறாமல் எண்ணூர் நெடுஞ்சாலையின் சில அடிகளையும் ஆக்கிரமித்து இரண்டு மாடி கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டது. மேற்கண்ட அனுமதியற்ற விதிமீறல் கட்டுமானம் நடக்கும்போதே சம்மந்தப்பட்ட சென்னை மாநகராட்சி மண்டலம் –04–ன் அதிகாரிகளுக்கு புகார் அளித்திருந்தேன், எனினும் தாக்கீது மட்டும் அளித்து விட்டு வேறு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை, தற்போது இதைப்பற்றி கேட்கும்போது அங்கே புதியதாக எந்த கட்டுமானமும் நடக்கவில்லை என தவறான தகவல் அளித்து விதிமீறல் கட்டுமான உரிமையாளருக்கு சாதகமாக செயல்படுகின்றனர். மேற்கண்ட இந்த செயல்கள் மூலம் சென்னை பெருநகர மாநகராட்சிக்கு நிதி இழப்பு ஏற்பட்டதுடன் மண்டலம்–04–ன் அதிகாரிகள் அவர்களின் கடமையையும் தவறியுள்ளனர். எனவே இந்த புகார் மனுவினை தீர விசாரணை செய்து விதிமீறிய அனுமதியற்ற கட்டிடம் மீது உரிய நடவடிக்கை எடுக்க இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 26.10.2021 அன்று விசாரணைக்கு வருமாறு 13.10.2021 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3. முறையீட்டு மனுதாரர் 26.10.2021 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகி தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்தார். அவர் தனது வாக்குமூலத்தில் "சென்னை தண்டையார்பேட்டை எண்ணூர் நெடுஞ்சாலை வைத்தியநாதன் மேம்பாலத்தின் கீழ் நெல்லை வசந்த பவன் ஓட்டல் என்கின்ற உணவகம் இயங்கி வருகிறது. மேற்கண்ட உணவகம் அமைந்துள்ள கட்டடம் நெடுஞ்சாலைக்கு சொந்தமான சுமார் 300 சதுர அடி நிலத்தை ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ளது. இது குறித்து மாநகராட்சிக்கு பலமுறை மனுக்கள் அனுப்பியுள்ளேன். மேலும், இது குறித்து புகார் மனுவை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றத்திற்கு அனுப்பிய பின்னர், மேற்கண்ட கட்டிடத்திற்கு De-occupation Notice அளித்துள்ளனர். ஆனால், அதன் தொடர் நடவடிக்கையாக மேற்கண்ட விதிமுறைகளை மீறி கட்டப்பட்டுள்ள கட்டடத்தை Lock and seal செய்யவில்லை. எனவே, விதிமுறையை மீறி கட்டப்பட்டுள்ள வசந்த பவன் ஓட்டல் இயங்கி வரும் கட்டடத்தை Lock and seal செய்ய தேவையான நடவடிக்கையினை எடுத்திடுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

4. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-4ல் உதவி செயற்பொறியாளராகப் பணிபுரியும் திரு S,ஹரிநாத் மற்றும் சி. பாலசந்திரன், உதவிப்பொறியாளர் இருவரும் 26.10.2021 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தங்கள் வாக்குமூலத்தை சமர்ப்பித்தனர். தங்கள் வாக்குமூலத்தில் " சென்னை தண்டையார்பேட்டை எண்ணூர் நெடுஞ்சாலை வைத்தியநாதன் மேம்பாலத்தின் கீழ் பேருந்து நிலையம் அருகில் வசந்த் பவன் ஓட்டல் இயங்கி வருகிறது. மேற்கண்ட கட்டடம் ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, அக்கட்டிடத்திற்கு De-occupation Notice 20.10.2021 அன்று அளிக்கப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து 15 நாட்களுக்குள் கடையை காலி செய்யாத பட்சத்தில் 06.11.2021 அன்று கடைக்கு சீல் வைக்கப்படும். ஆனால், அதனை தொடர்ந்து Lock and seal Notice தற்போது வரை வழங்கப்படவில்லை என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தின் முன் பதிவு செய்கிறோம். மேலும் மேற்கண்ட பொருள் குறித்த புகார் மனு மாநகராட்சியால் பெறப்படும்வரை, மேற்கண்ட வசந்த் பவன் ஓட்டல் இயங்கி வரும் கட்டிடம் ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டது என்கின்ற விவரம் எங்களுக்கு தெரியாது என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்'' என்று தெரிவித்துள்ளனர்.

5. முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம், எதிர்மனுதாரரின் வாக்குமூலம் மற்றும் மண்டல அலுவலரின் அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

6. இந்நேர்வில் முறையீட்டு மனுதாரர் குறிப்பிட்டுள்ள கட்டிடம் பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டிட வரைபட அனுமதி பெறப்படவில்லை. மேலும் இது சம்மந்தமாக கட்டிடத்தின் உரிமையாளருக்கு தாக்கீது வழங்கப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மண்டலம்-4, மண்டல அலுவலர் 23.08.2021 நாளிட்ட தனது அறிக்கையில், 17.06.2021 தேதி அன்று வேலை நிறுத்த தாக்கீது Stop work notice/calling for approved plan notice) வழங்கப்பட்டது. அதன் தொடர் நடவடிக்கையாக பூட்டி தாழிடும் தாக்கீது Lock and seal and demolition notice 27.07.2021 அன்று வழங்கப்பட்டது. மேலும் சாலை ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுவிட்டது. எனவே இக்கட்டிடம் மீது பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட அனுமதியற்ற கட்டடம் குறித்து 02.03.2020க்கு பிறகு 17.06.2021 வரை மண்டலம் –4 அலுவலர்களின் கவனத்திற்கு வந்தும் இந்நேர்வில் அறிவிப்பிற்கு (Notice) பிந்தைய நடவடிக்கை (Lock and seal ) எதுவும் எடுக்காமல் இருந்துள்ளனர். இச்செயலுக்கு பொறுப்பான சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும் மற்றும் மேற்கண்ட கட்டிடத்தின் மீது தெரிவிக்கப்பட்டுள்ள ஆக்கிரமிப்பு புகார் மீது நடவடிக்கை எடுக்கவும், அனுமதியற்ற கூட்டிடத்தின் மீது மாநகராட்சியால் மேற்கொள்ள வேண்டிய தொடர் சட்ட நடவடிக்கைகள் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2022ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 03–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1)திரு.B.விஜயகுமார்,
எண்.14/15, சால்ட் குறுக்கு தெரு,
துர்காதேவி நகர், தண்டையார்பேட்டை,
சென்னை – 600 081.

2)ஆணையாளர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

3)மண்டல அலுவலர்,
மண்டலம் 04,
சென்னை மாநகராட்சி அலுவலகம்,
எண்.266, திருவெற்றியூர் நெடுஞ்சாலை,
பழைய வண்ணாரப்பேட்டை,
சென்னை – 600 021.

4)கண்காணிப்பு பொறியாளர்,
மழைநீர் வடிகால்துறை,
ஒருங்கிணைப்பாளர்(Nodal Officer)
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை – 600 003.

நகல்.
மாண்புமிகுமுறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

03/02/22

செயலாளர்